பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.09.2025 முதல் 07.09.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182

E-mail: agronaas2012@gmail.comதொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 070 (08) PJN/GKMS/2025 தேதி: 02.09.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (28.08.2025 முதல் 01.09.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 07.09.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/08 | 29/08 | 30/08 | 31/08 | 01/09 | | நாள்-1 03/09 | நாள்-2 04/09 | நாள்-3 05/09 | நாள்-4 06/09 | நாள்-5 07/09 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 4 | 4 | 3 | 2 | 0 |
| 36 | 36 | 36 | 36 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 34 | 34 | 34 | 35 | 35 |
| 26 | 26 | 26 | 26 | 26 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 25 | 25 | 25 | 26 | 26 |
| 2 | 3 | 2 | 3 | 5 | மேக மூட்டம் | 5 | 5 | 5 | 6 | 6 |
| 62-89 | 54-81 | 64-82 | 62-89 | 57-81 | ஈரப்பதம் (%) | 75-80 | 75-80 | 75-80 | 65-75 | 65-75 |
| 4 | 5 | 4 | 4 | 2 | காற்றின் வேகம் (கி.மீ) | 20 | 22 | 22 | 20 | 14 |
| மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு |

**எதிர்பார்க்கப்படும் வானிலை (03.09.2025 முதல் 07.09.2025 வரை):**

அடுத்த நான்கு நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 25-35 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 65-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14-22 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

செப்டம்பர் 07 லிருந்து 13 வரை மழை (2.2 மிமீ) இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை (33.1 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (23.5 டி.செ) இயல்பாக இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

# வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| நெல் | | நெற் பயிரில், குருத்துப் பூச்சிகளை கட்டுப்படுத்த, டிரைக்கோகிராமா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணிகளை ஹெக்டருக்கு 1,00,000 (நடவு நட்டபின் 37, 44 and 51 நாட்களில்) பயன்படுத்தலாம் அல்லது லிட்டருக்கு 4 மி.லி அசாடிராக்டின் (0.03 %) அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | | நெற் பயிரில் இலை சுருட்டுப் புழுக்களை கட்டுப்படுத்த டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் ஒட்டுண்ணிகளை 5cc (ஹெக்டேருக்கு 1,00,000) என்ற அளவில் 37, 44, 54 ஆகிய நாட்களில் வெளியிடலாம்.<br>தழைச்சத்துக்களை தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாக படுத்துவத்தை தவிர்க்கவேண்டும்.<br>விளக்குப் பொறியை பயன்படுத்தி அந்து பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம்.<br>நடவுவயலில் டி(T) வடிவ குச்சிகளை வைத்து பூச்சிகளை உண்ணும் பறவைகளை பயன்படுத்தி பூச்சிகளை கட்டுப்படுத்தலாம் அல்லது கார்டேப்ஹைட்ரோகுளோரைடு (cartaphydrochloride 50% SP) லிட்டருக்கு 2 கிராம் அல்லது ஃப்ளுபென்டையமைடு (flubendiamide 20 WG) லிட்டருக்கு 0.25 கிராம் அல்லது தையமீதாக்சம் (thiamethoxam 25 WG) லிட்டருக்கு 0.2 கிராம் என்ற அளவில் தெளிக்கலாம். |
| கத்தரி | | கத்தரி பயிரில் காய்ப்புழு மற்றும் புரோடினியா புழு க்களைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு பேசில்லஸ் துரின்ஜேன்சிஸ் 2 கிராம் அல்லது நோவலுரான் 10% EC 1மி.லி அல்லது ப்ளூபென்டமைட் 0.2-0.3 மி.லி ஆகியவற்றை உபயோகிக்கலாம். |
| மல்லிகை | | தாக்கப்பட்ட மொக்குகளை புழுக்களுடன் சேகரித்து அழிக்கவும்.<br>விளக்குப்பொறி அமைத்து அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.<br>வேப்பங்கொட்டை வடிநீர் 5 சதம் தெளிக்கலாம். |
| கால்நடை | உண்ணிக்காய்ச்சல் | கால்நடைகளை உண்ணிக்காய்ச்சல் நோய் பாதிக்க வாய்ப்பு உள்ளதனால், நோய் பாதிப்பில் இருந்து கால்நடைகளை பாதுகாக்க, நோயின் அறிகுறி தென்பட்டதும், உடனே சிகிச்சை அளிக்க அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அனுகவும். முதலில் தீவனம் உண்பதை குறைப்பதால் பால் உற்பத்தி குறையும். அதிகளவிலான காய்ச்சல், சாணம் இறுகுவது அல்லது கழிச்சலாக வெளியேறுவது, சிறுநீர் நிறம் மாறுதல் போன்றவை, இதன் அறிகுறிகள். உண்ணிக்காய்ச்சல் இந்நோயைத் தடுக்க உண்ணியைக் கட்டுப்படுத்த பூட்டாக்ஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும். மாடுகளை இம்மருந்து கொண்டு குளிப்பாட்டலாம். உண்ணி தங்கும் செடி, புதர், சுவற்றின் கீரல், ஓட்டை, சந்து போன்றவற்றில் மருந்தைத் தெளிக்கவேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த நான்கு நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**